

நீலகிரி மாவட்டம் உதகைபேரார் பகுதியில் புதிய நடமாடும் நியாய விலைக் கடையினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.

## நெல்லை மத்திய மாவட்ட

# பாக முகவர்கள் கூட்டம்: நாளை நடைபெறுகிறது! அமைச்சர் கே.என்.நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

## அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை.ஜுன் 28-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க பாக நிலை முகவர்கள் கூட்டம் நாளை (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி அளவில் பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் மாதா மாளிகையில் நடைபெறுகிறது

நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்



மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.பாக நிலை முகவர்கள் கூட்டம் நாளை (29 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி அளவில் பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் மாதா மாளிகையில் நடைபெறுகிறது

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு,கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி.ஆகியோர் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர,பகுதி,ஒன்றிய, பேரூர், வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் BLA2 உள்பட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. “ஓரணியில் தமிழ்நாடு”புதிய கழக உறுப்பினர் சேர்க்கை.

2. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள்.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம் – திருக்கோவிலூர், விக்கிரவாண்டி

# சட்டப் பேரவை தொகுதி பாக முகவர்கள், பாக எண் முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜுன். 28-

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட திருக்கோவிலூர் மற்றும் விக்கிரவாண்டி சட்டப் பேரவை தொகுதி பாக முகவர்கள் ( B LA 2 ) மற்றும் பாக எண் முகவர்கள் ( B D A ) கூட்டம் வரும் 28 06 2025 மற்றும் 29 06 2025 தேதிகளில் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொள்கிறார்.



சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி , தொகுதி பார்வையாளர்கள் ஜி.கார்த்திகேயன் , சிவ.ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கும் இந்நிகழ்வில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் ,

B L A 2 மற்றும் B D A க்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

28 06 2025 ( சனிக்கிழமை )

தேவி முருகன் திருமண மண்டபம் திருக்கோவிலூர்

காலை 9 மணி

1.மணம்பூண்டி ஒன்றியம்

2.முகையூர் வடக்கு ஒன்றியம்

3.முகையூர் தெற்கு ஒன்றியம்

4. அரகண்டநல்லூர் பேரூர்

மாலை 3 மணி

1. திருவெண்ணெய் நல்லூர் ( மேற்கு ) ஒன்றியம்

2. திருக்கோவிலூர் ( கிழக்கு ) ஒன்றியம்

3. திருக்கோவிலூர் நகரம்

4. திருவெண்ணெய் நல்லூர் பேரூர்

29 06 2025 ( ஞாயிற்றுக்கிழமை )

ஜெயராம் திருமண மண்டபம் விக்கிரவாண்டி

காலை 9 மணி

1. விக்கிரவாண்டி ( கிழக்கு ) ஒன்றியம்

2. விக்கிரவாண்டி ( மேற்கு ) ஒன்றியம்

3. விக்கிரவாண்டி ( மத்திய ) ஒன்றியம்

4. விக்கிரவாண்டி பேரூர்

மாலை 3 மணி

1. காணை ( தெற்கு ) ஒன்றியம்

2. காணை ( வடக்கு ) ஒன்றியம்

3. காணை ( மத்திய ) ஒன்றியம்

4. கோலியனூர் ( மேற்கு ) ஒன்றியம்

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

## கரூர், நாமக்கல் கிழக்கு - மேற்கு மாவட்ட

# வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்! என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர்கள் வி.செந்தில்பாலாஜி - கே.எஸ்.மூர்த்தி பங்கேற்பு!

கரூர், ஜூன் 28–

கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களை சார்ந்த கழக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்து வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர்.இளங்கோ சிறப்புரை யாற்றினார்.

கரூரில் கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக வழக்கறிஞர் அணி சார்பில் 2026 ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர் கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர். இளங்கோ கலந்து கொண்டு தேர்தலில் பணியாற்றுவது குறித்தும், சட்ட நுணுக்கங்களோடு எதிர்கொள்ளது குறித்தும் திமுக வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

திமுக சட்டத்துறை மேற்கு மண்டலம் 2 கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, டிஎல்சி, சிஎல்சி, யுஎல்சி, என்எல்சி, சிடி எல் சி வழக்கறிகளுக்கான 2026 சட்டமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. மூத்த வழக்கறிஞரும், மாநில சட்டத்துறை செயலாளருமான என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை தாங்கி பேசினார். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.தாச பிரகாஷ், நாமக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தபாபு, வரவேற்புரை யாற்றினர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், கழக மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் கே.எஸ். மூர்த்தி, மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், துணைச் செயலாளர்கள் எம்எஸ்பி .வீரமணி, ஜிசந்திர போஸ், நாமக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஏஆர். தன சேகரன், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவகாமசுந்தரி, முன்னாள் எம்எல்ஏ பி.காமராஜ், முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பி. ரமணி, துணைத்தலைவர் இரா. மணிவாசகம், துணை அமைப்பாளர்கள் கே எஸ்எம்.சாகுல்ஹமீது, சி சோமசுந்தரம், எம்.லட்சுமணன்,

டி பிச்சைமுத்து, எம்.செல்வகுமார், நாமக்கல் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் என்கேபி.வடிவேல், எஸ்.கண்ணன், எஸ்.பழனிச்சாமி, எஸ். வெங்கடாசலம், ஏ.அகிலன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் டி.சுரேஷ்பாபு,

டிஎம். சரவணகுமார், ஏபி. வெங்கட் கண்ணன், எஸ்.ரமேஷ், இஎன். மாதேஸ்வரன், எஸ். ஆனந்த், கே. நல்லுசாமி, சிறப்பு அழைப்பாளர்களாக கரூர் வழக்கறிஞர்கள் என். செந்தில்குமார், இரா.குடியரசு, டி. ராஜேஸ்வரி, டி.நீல மேகம், கே. பாலசுப்பிரமணியன் என்.பி. ரமேஷ் நக்கீரன் கே. சுப்பிரமணி யன் ஜி.ராஜேஸ்வரி கலந்து கொண்டனர். ஐ.கணபதி நன்றியுரை கூறினார். விழா ஏற்பாடுகளை கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணியினர் செய்திருந்தனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்(BDA), பாகநிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்படவேண்டியது குறித்து கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், புவனகிரி ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் 28062025 சனிக்கிழமை, 29062025 ஞயிற்றுக்கிழமை கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்கள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.**

**ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை BDA மற்றும் BLA2 பயிற்சி கூட்டம்**

| தேதி | தொகுதி | இடம் | ஒன்றியம் பேரூர் |
|---|---|---|---|
| 28-06-2025 சனிக்கிழமை காலை 9.00 மணி | காட்டுமன்னார் கோயில் | மணியன் மஹால் | காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார் கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணி | காட்டுமன்னார் கோயில் | தேத்தாம்பட்டு | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 03.00 மணி | காட்டுமன்னார் கோயில் | APM மஹால் லால்பேட்டை | குமராட்சி தெற்கு ஒன்றியம் குமராட்சி வடக்கு ஒன்றியம் குமராட்சி மேற்கு ஒன்றியம் லால்பேட்டை பேரூர் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 05.00 மணி | காட்டுமன்னார் கோயில் | வேல் அரங்கம் திருமுட்டம் | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர் |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி | குறிஞ்சிப்பாடி தொகுதி | மங்கியர்கரசி திருமண மண்டபம் வடலூர் | வடலூர் நகரம், குறிஞ்சிப்பாடி பேரூர் |
| 28-06-2025 சனிக்கிழமை மாலை 03.00 மணி | குறிஞ்சிப்பாடி தொகுதி | மங்கியர்கரசி திருமண மண்டபம் வடலூர் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி | குறிஞ்சிப்பாடி தொகுதி | லோகம்மாள் திருமண மண்டபம் கண்ணார பேட்டை | கடலூர் கிழக்கு ஒன்றியம், கடலூர் மேற்கு ஒன்றியம் |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி | சிதம்பரம் | சீனிவாசன் மண்டபம் அம்மாபேட்டை | குமராட்சி கிழக்கு ஒன்றியம், குமராட்சி மத்திய ஒன்றியம், அண்ணாமலை நகர் பேரூர் |
| 28-06-2025 சனிக்கிழமை மாலை 03.00 மணி | சிதம்பரம் | அறுபத்து மூவர் திருமண மண்டபம் தெற்கு வீதி | சிதம்பரம் நகரம் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி | சிதம்பரம் | ஓம் சக்தி திருமண மண்டபம் புதுச்சத்திரம் | பரங்கிபேட்டை வடக்கு ஒன்றியம் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை பகல் 2.00 மணி | சிதம்பரம் | SS மஹால் சி.முட்டலூர் | பரங்கிபேட்டை தெற்கு ஒன்றியம், பரங்கிபேட்டை மேற்கு ஒன்றியம் பரங்கிபேட்டை பேரூர் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 06.00 மணி | சிதம்பரம் | கழக அலுவலகம் | கிள்ளை பேரூர் |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி | கடலூர் தொகுதி | செம்மண்டலம் சமுதாயக் கூடம் | மஞ்சக்குப்பம் பகுதி, |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 11.30 மணி | கடலூர் தொகுதி | ரோட்டரி கிளப் | புதுபாளையம் பகுதி |
| 28-06-2025 சனிக்கிழமை மாலை 03.00 மணி | கடலூர் தொகுதி | பால கண்ணையா மண்டபம் | திருப்பாதிபுலியூர் பகுதி |
| 28-06-2025 சனிக்கிழமை மாலை 04.30 மணி | கடலூர் தொகுதி | அழகானந்தா திருமண மண்டபம் | துறைமுகம் பகுதி |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணி | கடலூர் தொகுதி | அபிராமி திருமண மண்டபம் வரகால்பட்டு | கடலூர் தெற்கு ஒன்றியம் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணி | கடலூர் தொகுதி | அழகியநத்தம் சமுதாய கூடம் | கடலூர் வடக்கு ஒன்றியம், கடலூர் மத்திய ஒன்றியம் |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 09.00 மணி | புவனகிரி தொகுதி | ஜெகன் திருமண மண்டபம் சேத்தியாதோப்பு | புவனகிரி மேற்கு ஒன்றியம், சேத்தியாதோப்பு பேரூர் |
| 28-06-2025 சனிக்கிழமை காலை 11.00 மணி | புவனகிரி தொகுதி | NEA திருமண மண்டபம் டி.நெடுஞ்சேரி | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம், கீரப்பாளையம் மத்திய ஒன்றியம் |
| 28-06-2025 சனிக்கிழமை மாலை 05.00 மணி | புவனகிரி தொகுதி | VRS திருமண மண்டபம் பெரியாகுறிச்சி | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம், கம்மாபுரம் மத்தி ஒன்றியம், கெங்கைகொண்டான் பேரூர் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 03.00 மணி | புவனகிரி தொகுதி | கண்ணன் மண்டபம் புவனகிரி | புவனகிரி கிழக்கு ஒன்றியம், புவனகிரி மத்திய ஒன்றியம், புவனகிரி பேரூர் |
| 29-06-2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 05.00 மணி | புவனகிரி தொகுதி | KRC திருமண மண்டபம் கம்மாபுரம் | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், திருமுட்டம் வடக்கு ஒன்றியம் |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.


தேனி தெற்கு மாவட்டம் கம்பம் தெற்கு நகர இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரப் பொதுக்கூட்டம் தெற்கு நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் ஹரிஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. தெற்கு நகர பொறுப்பாளர் பால்பாண்டி ராஜா வரவேற்புரை ஆற்றினார். உடன் கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், நகர செயலாளர் வீரபாண்டியன் மற்றும் கழக மூத்த முன்னாடிகள் கலந்து கொண்டனர்.